மனு கொடுத்திருக்கிறேன்; கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே, எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கிற ஆட்சி என்று சொல்லக்கூடிய உங்கள் ஆட்சியிலே இது எங்களுக்குக் கிடைக்கவில்லை; கிடைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அவருடைய ஐந்தாண்டுக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து அவருடைய தொகுதிக்கே பஸ் வாங்க முடியாதவர், மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வசதியை ஏற்படுத்தித் தரமுடியும் என்ற நம்பிக்கையோடு சொன்னதற்கு முதலில் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

189—

சொந்தக் கட்டடம்

***61746—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 *செப்டம்பர்* 1]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை ஊராட்சியிலே கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறாத பக்தியும், மனதிலே உறுதியும் தெய்வத்திடம் தினம் வைத்தால், அந்த லோகத்தில் நமக்கு நன்மை கிடைக்கும். மாறாத பக்தியும், தூய்மையான தொண்டும் அம்மா என்னும் தெய்வத்திடம் நாம் வைத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த லோகத்தில் எல்லாம் கிட்டும் என்பதை தனது செயலால் நிரூபிக்கும் தருமத் தாயே! இந்தியாவில் முதல் பெண் மருத்துவர் என்ற புகழ்பெற்ற டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் பிறந்த மண்ணுக்கு மணம் சேர்க்கும் வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதுக்கோட்டையில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி வழங்கிய, நான் நாளும் வணங்கும் தாய் உருவ தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் வணங்கி எனது சார்பாகவும், புதுக்கோட்டை மக்களின் சார்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மேலும், புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை ஊராட்சியில் கால்நடை கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே biggest cattle farm இருப்பது என்னுடைய தொகுதியிலுள்ள மத்திகிரியிலேதான். இன்னும் சொல்லப்போனால், ஆசியாவிலேயே biggest cattle farm அது. அந்த cattle farm–லே recent ஆக kangeyam காங்கேயம் breeds என்கிற bulls கிட்டத்தட்ட 17 bulls–ஐ mercy killing செய்திருக்கிறார்கள். அதை அதிகாரிகளிடம் கேட்கும்போது, அதிகாரிகள் சொன்னார்கள், அவற்றிற்கு johne's என்ற disease வந்ததனாலே, அதை நாங்கள் mercy killing பண்ணினோம் என்றார்கள். ஏன் இந்த மாதிரி செய்தீர்கள் என்று கேட்டபோது, வருடா வருடம் regular ஆக நடக்கிற practice–தான் இது என்று சொல்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தால், அந்த mercy killing–ஐ நிறுத்திவிட்டு, அந்த johne's disease பரவாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த ஓசூர், மத்திகிரி பண்ணையிலே உடனடியாக கால்நடைத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.